சொன்னபடி, தனிப்பட்டவர்களுடைய இல்லத்தில் எந்த நேரத்தில், யார் எத்தகைய ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது ஜனநாயகக் கொள்கைக்கு உகந்ததல்ல. அதற்கு இடமளிக்காத வகையில் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் ஒரு தன்மையாக வந்தால் கூட, அது மிகவும் நல்லது. அப்படிப்பட்ட மரபையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்கு நாம் முயல வேண்டும்; ஏற்படுத்துவது நல்லது. இப்படிப் பட்ட சம்பவம் ஏற்பட்டது வருந்துவதற்குரிய ஒன்று. தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை நான் சொல்கிறேன். இப்போது புலனாய்வு நடந்துகொண்டிருக்கிறது. புலனாய்வு முடிந்த பிறகு, முழு விவரங்களும் நமக்குக் கிடைத்துவிடும். அதற்குப் பிறகு அதன்மீது தக்க நடவடிக்கைகளை நாம் சட்டப்படி எடுக்கலாம் என்று தெரிவித்து, இதை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டிருப்பது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் மூளைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டு இறந்ததால், அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே: விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, சென்ற ஆண்டும் இதே ஜனவரி மாதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், மூளைக் காய்ச்சல் ஏற்பட்டு சுமார் 20 பேர் வரை இறந்தார்கள் என்று செய்தி வந்தது. அப்போது இந்த

@ 332-333 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1981 மார்ச் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

அவையிலே அதை எடுத்துச் சொன்னோம். பூனாவில் இருந்து நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டு பரிசீலனை செய்து, சில வைரஸ்களால் ஏற்படுகிற நோய் இது என்றும் அது கன்றுகாலிகளுக்கு முதலில் பரவி பிறகு மக்களுக்கு வருகிறது என்றும், அதுபற்றிய தடுப்பு முறைகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டது என்றும் கூட சொன்னார்கள். இந்த ஆண்டும் அதே ஜனவரி மாதத்தில் இந்த நோய் ஏற்பட்டு இப்போது அளித்திருக்கும் விவர அறிக்கையிலே 10 பேர் இறந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள பத்திரிகை களில் பெயர், ஊர், வயது எல்லா விவரங்களும் போட்டு 11 பேர் இறந்ததாக விவரங்கள் வந்திருக்கின்றன. இன்னும் தனியார் மருத்துவமனைகளிலேயும் பல பேர் இறந்துபோயிருப்பதாகச் சொல்கிறார்கள். இறந்தவர்களின் எண் ணிக்கை சுமார் 20 க்கும் மேல் இருக்கும் என்று அங்குள்ள மக்கள் சொல்கி றார்கள். 20-22 வயது உள்ளவர்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலை வாராமலிருப்பதற்கு அரசு விரைவாக ஆய்வு நடத்தி இந்த நோய் வாராமல் தடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த மாவட் டத்தைப் பொறுத்தவரையில், ஆண்டுதோறுக்குமான புள்ளிவிவரத்தை நான் வைத்திருக்கிறேன். 1978 ஆம் ஆண்டு மூளைக் காய்ச்சல் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 302, இறந்தவர்கள் 99. 1979 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 64, இறந்தவர்களின் எண் ணிக்கை 3. 1980 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 123 இறந்தவர்களின் எண்ணிக்கை 15. சாதாரணமாக இந்தமாதிரி நோய்கள் ஜனவரிக்குப் பிறகுதான் வந்துகொண்டிருக்கின்றன. Polio, Encephalitis, measles, chicken pox போன்ற நோய்கள் எல்லாம் ஒரு சீசனில்தான வருகின்றன. 1981 ஜனவரியில், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 51 பேர். இறந்தவர்களின் எண்ணிக்கை 8. 1981 பிப்ரவரியில், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8, இறந்தவர்களின் எண்ணிக்கை 2. ஆகவே, இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்த்து நான் திருப்திப்படுவதாக இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல ஒருவர் இறந் தாலும் கூட, நாம் இதில் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அந்த அடிப்படையிலே Infected localities have been sprayed with B.H.C. இன்னொன்று, ஆராய்ச்சி செய்யப்பட்டதா என்று கேட்டார்கள். இப்போது நாம் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக இது (Japanese encephalitis) என்று கண்டுபிடித்து அந்தப் பெயரை ஒரு நாமகாணம் போல கண்டுபிடித் திருக்கிறோம். (Japanese encephalitis) மூலம் தான் இந்த நோய் வரு

கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறோம். ஒருவித (Mosquito) தான் இதற்குக் காரணம் என்று சொல்லி (B.H.C.) 50 சதவிதம் Spray செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்றடைப்பு என்ற இடத்திலே பறவைகள் சரணாலயம் இருக்கிறது. டிசம்பர்-ஜனவரி மாதத்திலே தான் ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிலே இருந்து பறவைகள் அங்கு வந்து மரங்களிலே தங்குகின்றன. பறவைகள் மூலம் தான் இந்த நோய் வருகிறதோ என்று சாதாரண மக்கள் பேசுகின்றார்கள். ஆகவே, இந்தக் கருத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்து, இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்தக் கருத்தையும் சொல்லி அதற்கு ஒரு ஆராய்ச்சி செய்யலாம். பறவைகள் வருகின்றன என்று சொன்னால், அவைகள் வரும்போது We cannot stop it. Mass exodus. என்ற முறையிலே ஒரு நாட்டிலேயிருந்து வரும்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் இந்த வியாதிக்கான தனி சிகிச்சை முறை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. திடீர்ச் சாவு ஏற்படுத்தும் இந்த வியாதிக்கு, தனி சிகிச்சை முறை கண்டுபிடிக்க அரசு ஆராய்ச்சி செய்யும் அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்குமா ? இப்போது தனி சிகிச்சை முறை இல்லை என்று குறிப்பிட்டிருப்பதால் ஒரு அவசர உணர்வோடு அரசு செயல்படுமா ?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை ஆங்கிலத்தில், "No specific treatment, but symptomatic treatment" என்று தெளிவாகச் சொல்லலாம். பல நேரங்களில் "ஸ்பெசிபிக் ட்ரீட்மென்ட்" இல்லாமலே "சிம்டோமாட்டிக்" சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும். ஒருவருக்குக் காய்ச்சல் வருகிறதென்றால், அந்தக் காய்ச்சல் வருவதற்குரிய அறிகுறிகளைப் பார்த்து சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்து வருகிறோம். ஆனால், "ஸ்பெசிபிக் ட்ரீட்மென்ட்" இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படிக் கண்டுபிடித்த பிறகு அது கிடைக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்களை, திருநெல்வேலி மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுமாதிரியான வியாதி திடீரென்று தோன்றி, குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுக்கு தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலேயே சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திருநெல்வேலி மருத்துவ மனைக்கு எடுத்துக்கொண்டு போவதன் மூலமாக டையக்னாசிஸ் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்த வியாதியைப் பொறுத்த வரையில், தாலுக்கா மருத்துவமனையிலேயே சிகிச்சையைச் செய்யலாம். "சிம்டோமாட்டிக் ட்ரீட்மெண்ட்" என்பது அலட்சியமாகச் செய்யப்படும் ட்ரீட்மெண்ட் அல்ல. அது ஒரு ஒத்துக்கொள்ளப்பட்ட முறை. Symptomatic treatment is an accepted method of treatment. இதை எல்லா தாலுக்கா மருத்துவ மனைகளிலும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. திருநெல்வேலி தலைமை மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுமானால் பிரைய்ன் சிரோசிசை எடுத்து வைரோலஜி டிப்பார்ட்மெண்ட்டுக்கு அனுப்ப வசதியாக இருக்கும். ஆனால் சிகிச்சையில் எந்தவிதக் குறைபாடும் இல்லை.

(2) அரசின் அனுமதியின்றி சென்னையில் டாக்சி, ஆட்டோ கட்டணத்தை அதன் ஓட்டுநர்கள் உயர்த்தியுள்ளது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"அரசின் அனுமதியின்றி சென்னையில் டாக்சி, ஆட்டோ டிரைவர்கள், டாக்சி, ஆட்டோ கட்டணத்தை உயர்த்தியுள்ளதால் பொது மக்களுக்கு ஏற் பட்டுள்ள அவதி குறித்து."

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 333 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.